# JUDICIAL MAGISTRATE COURT, AMBATTUR
## DEPOSITION OF WITNESS

MC. No. 3/2022 Date:07.05.2026 P.W. 1 / LW

| | |
|---|---|
| பெயர் | திருமதி. கௌசல்யா |
| தந்தை பெயர் க/பெ | திரு. சீனிவாசன் |
| முகவரி | நெ.16, வடக்கு மாடவீதி சென்னை |
| கிராமம் | |
| மாவட்டம் | |
| ஜாதி | |
| தொழில் | |
| மதம் | |
| வயது | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the 07th day of May 2026.

**மனுதாரர் ஆஜர். எதிர்மனுதாரர் ஆஜர்.**

**எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி.**

நான் எனது தந்தை விட்டில் வசித்து வருகிறேன். அந்த மூன்று மாடி உடையது என்றால் சரிதான். கீழ் தளத்தில் ஒரு வீடு, ஒரு கடை உள்ளது என்றால் சரிதான். முதல் மாடியில் நான், எனது தந்தை, எனது குழந்தையுடன் உள்ளேன் என்றால் சரிதான். இரண்டாவது மாடியில் சிறியதாக ஒரு வீடு உள்ளது. அதை வாடகைக்கு விட்டுள்ளோம். எனது தந்தை ரியல் எஸ்டேட் தொழில் செய்து வருகிறார். எனது தந்தை யாருக்கும் பைனான்ஸ் கேட்டால் விடுவாரா என்றால் இல்லை. எனது தந்தை ரூ. 25 லட்சம், 50 லட்சம் என பைனான்ஸ் கொடுத்து மாதம் ரூ.5 லட்சம் வட்டி பணம் வருகிறது என்று சொன்னால் சரியல்ல. நான் BCA படித்துள்ளதால் என்னால் வேலைக்கு செல்ல முடியும் என்று சொன்னால், நான் படித்து 10 வருடங்கள் ஆகிறது, எந்த அனுபவமும் இல்லை, குழந்தைகளை பார்த்துக்கொள்ள வேண்டும், அதனால் வேலைக்கு செல்ல இயலாது. நான் தாக்கல் செய்துள்ள சொத்து மற்றும் கடன் பற்றிய அறிக்கையில் திருமணமானது 19.02.2018 என்றும், நாங்கள் பிரிந்து சென்ற தேதி 12.12.2019 என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். சொத்து மற்றும் கடன் பற்றிய அறிக்கையில் வீட்டு வாடகை, வீட்டு செலவு, மருந்து செலவு, குழந்தைகள் பராமரிப்பு, போக்குவரத்திற்கு ஆகியவற்றிக்காக மாதம் ரூபாய். 50,000/– கேட்டுள்ளேன் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள ஜீவனாம்சம் வழக்கின் பிரமாண வாக்குமூலத்தில் பொய்யான சங்கதிகளை சொல்லி தாக்கல்

செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. இது வரை என் கணவர் மீது காவல் நிலையத்தில் எத்தனை முறை புகார் கொடுத்தேன் என்றால் ஒரு முறை கூட கொடுக்கவில்லை. எனது தந்தையும் கொடுக்கவில்லை. நான் தாக்கல் செய்துள்ள இந்த வழக்கிற்கு எனது கணவர் எதிருரை தாக்கல் செய்துள்ளார். அதில் உள்ள விவரங்களை நான் படித்து தெரிந்துகொண்டேன். எனது தந்தை ரியல் எஸ்டேட் மற்றும் பைனான்ஸ் செய்வதால் எனது தந்தை குடும்பம் வசதியாக உள்ளது என்றால் எனது தந்தை ரியலேஸ்டேட் செய்து வருகிறோர். வசதியான குடும்பம் தான் ஆனால் பைனான்ஸ் செய்யவில்லை. நான் எனது கணவரை பிரிந்து வந்த மூன்று வருடம் கழித்து தான் இந்த ஜீவனாம்சம் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் இல்லை. இரண்டு வருடம் கழித்து தாக்கல் செய்தேன். எனக்கு வசதி இருந்ததால் காலதாமதமாக ஜீவனாம்ச வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள குடும்பசார் வன்முறையிலிருந்து பெண்களை பாதுகாக்கும் சட்டப்படியான DVC No.31/2025 வழக்கில் எனது கணவர் வீட்டிலிருந்து நானும், குழந்தைகளும் குடியிருப்பதற்கு இருப்பிட வசதி செய்து கொடுக்குமாறு பரிகாரம் கோரவில்லை என்றால் சரிதான். எனது கணவர் நான் குடியிருந்து வரும் முதல் மாடி வீட்டிற்கு என்னுடன் சேர்ந்து வாழ வந்தால் அவரை நான் சேர்த்துக்கொள்ள மாட்டேன். நான் எனது கணவர் வீட்டிற்கு தற்போது செல்ல தயாராக இருக்கிறேன் என்பதை வழக்கிற்காக சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. நான் எனது தந்தையின் அதிகப்படியான வருமாணத்தினாலும், எனது தந்தையின் அறிவுரைப்படியும் நான் எனது கணவர் வீட்டிற்கு செல்லாமல் வசதியாக எனது தந்தை வீட்டில் வாழ்ந்து வருகிறேன் என்று சொன்னால் சரியல்ல. நான் எனது சுய விருப்பத்தின் படி எனது கணவரை விட்டு பிரிந்து வாழ்கிறேன். அதனாதல் ஜீவனாம்சம் கேட்பதற்கு எந்த உரிமையும் இல்லை என்றால் சரியல்ல.

**எதிரிமனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை– இல்லை.**

Typed to my dictation in open Court.
Read over to the witness and admitted
by the witness as correct.

Judicial Magistrate,
Ambattur